செ.வெ. எண்: 349 நாள்: 19.06.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.06.2012) தலைமைச் செயலகத்தில், போக்குவரத்து துறையில் 5 கோடியே 18 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 7 அலுவலகக் கட்டடங்கள், ஒரு சோதனைச்சாவடி கட்டடம் மற்றும் ஒரு ஓட்டுநர் தேர்வுத்தளம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

வாகனங்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், ஓட்டுநர் உரிமங்கள் பெறுதல், புதிய வாகனங்களை பதிவு செய்தல், போக்குவரத்து வாகன வரி போன்றவற்றிற்காக பொதுமக்கள் போக்குவரத்து அலுவலகங்களை நாடி செல்வது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் அனைத்து வசதிகளுடன் இயங்க வேண்டும் என்பதின் அடிப்படையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் அடிப்படையில், விழுப்புரத்தில் 73 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடம்; ஈரோட்டில் 62 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடம்; சேலத்தில் 68 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகக் கட்டடம்; தஞ்சாவூரில் 70 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவவலகக் கட்டடம்; உளுந்தூர்பேட்டையில் 67 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி அலுவலகக் கட்டடம்; மணப்பாறையில் 74 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி அலுவலகக் கட்டடம்; அரக்கோணத்தில் 88 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பகுதி அலுவலகக் கட்டடம் மற்றும் தேர்வுத்தளம்; தமிழகம் – புதுச்சேரி எல்லையிலுள்ள திருச்சிற்றம்பலத்தில் 13 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சோதனைச்சாவடி கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தாம்பரம், திண்டிவனம் ஆகிய பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தியும்; கள்ளக்குறிச்சி, வேடசந்தூர், பாலக்கோடு மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய புதிய பகுதி அலுவலகங்களை இன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத்துறை முதன்மைச் செயலாளர், உள்துறை முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத்துறை ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.
நாள்: 19.6.2012